312

ஸ்ரீ ராமநாராயணபெருமாள் துணை.

திருச்சிறுப்பள்ளி ஜில்லாவிற்கு ஆதியில் பெயர் வந்த திருச்சி பெயர் காரணகும்மி

கோ. கருப்பூர்
பல்லவராய
R. அண்ணாசாமி பாளையக்காரர் அவர்களால்
இயற்றப்பட்டு

கும்பகோணம் ஸ்டார் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது
1932 [விலை பைசா 6

ஸ்ரீ ராம நாராயண பெருமாள் துணை

திருச்சினுப்பள்ளி ஜில்லாவிற்கு ஆதியில் பெயர்வந்த திருச்சி பெயர் காரண கும்மி.

கும்மி மேட்டு.

1. கும்மியடி பெண்கள் கும்மியடி நீங்கள்
குவலயம் தன்னிலே கும்மியடி
நம்மையாளும் உச்சிப்பிள்ளையாரை
நாடிக்கும்மி யடியுங்கடி..

2. நம்வசிக்கும் நாட்டில் திருச்சினுப்பள்ளிக்கு
நன்மையாகஇப்பெயர்வந்ததை
கும்மியாகப்பாடி காரணத்தை இப்போ
கோதையேநான் செல்லக்கேளுங்கடி

3. இப்பொழுது ஜனங்கள் எங்கும்வாசமாய்
இருப்பதுபோலமுன் இல்லாமல்
அப்பொழுது இந்த ஜில்லா முழுதும்
அடர்ந்தக்காடாக இருந்துதடி

4. எங்கும்காடாவே தானிருந்ததற்கு
என்ன இப்போசாட்சி என்றுகேட்டால்
எங்கும் புகழ்கொண்ட மங்கையரே நான்
எடுத்துரைக்கிறேன் கேளுங்கடி

5. உத்தமர்பிரம்பலூர் தாலுக்காவிலும்
உடையார்பாளையம் தாலுக்காவிலும்
கத்தும்புலிகளின் சப்தத்தை இப்போது
காதினால் கேட்கலாம் பெண்மயிலே

6. காதினாலே சப்தம் கேட்கலாமே இப்போ
கண்ணினாலேநேரே பார்க்கலாமே
ஆதியில்காடு அடர்ந்திருந்ததற்கு
அன்னமே இது சாக்ஷியடி

7. இவ்விதமாகக்காடுகளமைந்த
இடபமுள்ளஇந்த ஜில்லாவை
மூவிதத்தலே யுடையமுகூசன்
முழுதும் தனது நாடாக்கிக்கொண்டான்

8. ருவணனுக்கு சகோதரன்முசையுள்ள
ருகூசனிந்தத்திரிசிரனும்
தேவரிஷிகளே செய்தக்கொடுமையை
தேன்மொழியே நீங்கள் பாருங்கடி

9. துஷ்டருகூசன் இருக்கானே இவன்
துன்பங்கள் செய்து அடிப்பானே
கஷ்டப்படநம்மால் முடியாதென்றுரிஷிகள்
காவேரியின் பக்கமாய் அமர்ந்தார்

10. தனிமையாகக்காட்டில் அக்காலத்திலே
தவங்கள்செய்து அமர்ந்திருந்த
முனிவர்களையும் ரிஷிகளையும் இந்த
மூற்கன் இம்சித்து வந்தானடி

11. முனிவர்களைக்கொன்று தின்றவண்டி இவன்
மூற்கனென்றபெயர் பெற்றவண்டி
கனிகளைத்தின்று ஜீவித்தவண்டி அப்போ
கானகமெல்லாந்திரிந்தவண்டி

12. தகாதக்காரியம் செய்தானே இவன்
தன்னிஷ்டப்படி நடந்தானே
தகாதக்காரியம் செய்தத்திரிசிரன்
தன்மையைச்சொல்கிறேன் கேளுங்கடி

13. கண்டங்கண்டமாக வெட்டினானே வெட்டி
கபாளமோக்ஷங்கள் செய்தானே
துண்டந்துண்டமாக எல்லோரையுமப்போ
துண்டித்தெரித்ததைக் கேளுங்கடி

14. கட்டிஇழுத்து அடித்தானே ஒரு
காரணமின்றி யுதைத்தானே
மட்டிப்பயலிவன் வெட்டியெரிந்ததில்
மாண்டாரனேகம் ரிஷிமார்கள்

15 பாவியடிக்கெட்டப்பாவியடி இவன்
பாவியடி துஷ்டப்பாவியடி
நாவினிலிவன்செய்தக் கொடுமையை இப்போது
நான்சொல்லமுடியாது பெண்மயிலே

16. துஷ்டதனம் செய்தானென்று சொன்னேனென்று
தூஷிக்காதே என் பெண்மயிலே
கஷ்டப்பட்டுசிவபெருமானைக்குறித்து
கடுமையானதவம்செய்தவண்டி

17. திரிசிரனென்றுல் மூன்று தலை யுள்ள்
தெய்வப்பக்தியில் சிறந்தவண்டி
திரிச்சி நகரிலமர்ந்தவண்டி பெருந்
தவங்கள் செய்துவரம் பெற்றவண்டி

18. பக்தனடி பெரிய பக்தனடி இவன்
பக்தனடி சிவ பக்தனடி
பக்தியாய் சிவ பெருமானைக்குறித்து
பார தவம் செய்த பக்தனடி

19. பரமனும் சந்தோஷந்தானடைந்து வரம்
பக்தனுக்களிக்க வேண்டுமென்று
பிரசன்னமாக இவன் முன்னே வந்ததை
பெண்மயிலே நானும் சொல்லுரண்டி.

20. தன் சுயரூப மெடுத்தாரடி அப்போ
திரிசிரன் முன்னுலே நின்றாரடி
என்னவரம் வேண்டும் உந்தனுக்கு இப்போ
சன்னிடம் சொல்லடா தாரேனென்றார்

21. கேட்க வேண்டியவரங்களே இப்போதே
கேட்டுக்கொளென்று உரைத்தவுடன்
கேட்க வேண்டியவரங்களே அப்போதே
கேட்டுக் கொண்டாண்டி திரிசிரனும்

22. வரங்களைப் பெற்ற திரிசிரனப்போது
வாகாணமலைக் கோட்டையிலே
கருங்கல்லாலே விக்ரகங்கள் செய்ததை
கட்டழகிகளாப் பாருங்கடி.

23. அம்மன் சுவாமியைப்போல் விக்ரகங்கள்செய்து
அன்புடனே இந்தக் குன்றில் வைத்து
பொம்மைகளென்று மனதில் நினைக்காமல்
பூஜை தினம் மூன்று காலம் செய்தான்

24. ஆதியிலிவன் பூஜைகள் செய்துவந்த
அம்மன் சுவாமி இருவிக்ரகமும்
நீதியாய்யரசாளும் இங்கிலீஷ் காலத்தில்
கோர்ட இப்போது பாருங்கடி

25. ஆதியிலே திருச்சிப்பட்டணத்திலுள்ள
அருமையுள்ள கோட்டை பக்கத்திலே
வீதிகளும் ராஜவீதிகளும் கடை
வீதிகளும் அப்போ இல்லையடி

26. கடைகளும் கடைத்தெருவுகளும் அய்யர்
காப்பிக்ளப்புடன் ஷாப்புகளும்
குடைகள் நிறைந்த கடைகளும் திருச்சி
குன்றினருகிலே பாருங்கடி

27. மண்டபங்களுங் கோயில்களும் பெரிய
மண்டிகளுடன் மாளிகைகளும்
கண்டவிடமெல்லாம் ஜெர்மன் சாமான்ள
கடைகளிருப்பதைப் பாருங்கடி

28. ஷாப்புக்கடைகளனேகமுண்டு அதில்
சந்தனக்கட்டை மிகவுமுண்டு
சோப்புகளனேகம் ஷாப்பிலிருப்பதை
சொன்னமே எல்லோரும் பாருங்கடி

29. நான்வசிக்கும் ஜில்லா திருச்சினுப்பள்ளியை
நாடெங்கும் புகழவே பாடவில்லே
தான்என்ற ஆண்மை யுடையவன் கதையை
தையலரே இப்போ செப்பினண்டி

30. திரிசிரன் என்னும் முகுஸன் இந்த
ஜில்லாவை ஆதியில் ஆண்டதினுல்
திரிசிர புரமென்னும் பெயரைவைத்து முன்னேர்
திருச்சினுப்பள்ளி என்னுரைத்தார்

31. கண்களாலே நேரே பார்த்ததில்லே இதை
காதாலே இப்போயான் கேட்டதில்லே
பெண்களா எல்லோரும் சேர்ந்துக்காலே
பிரட்டிக்கும்மி யடியுங்கடி

32. பூஜைகள் செய்ததும் புண்யமடைந்ததும்
பூர்வகால நூலில் சொல்லுதடி
பூஜைகன் செய்தத் திரிசிரன் கதையை
புகழ்ந்துக்கும்மி யடியுங்கடி

33. எல்லோரும் ஒன்றுகச் சேருங்கடி நீங்கள்
எங்கும் புகழவே பாடுங்கடி
பல்லவர் வம்சத்தில் பிறந்தவண்டி நான்
பாலன் அண்ணுசாமி தாஸனடி

முதல் பாகம் முற்றிற்று.

ஸ்டார் பிரஸ், ஸ்டார் பில்டிங்ஸ், கும்பகோணம்.